# விழித்தெழுவதற்கான வேளை (5:14-18)

*நம்மில் மிகப் பலர், கிறிஸ்தவர்கள் செய்ய வேண்டிய வகையில் நமது வெளிச்சங்கள் பிரகாசிக்க அனுமதிப்பதைப் புறக்கணித்து விடுகின்றோம். நாம் இருளில் உறங்குகின்றவர்களாகக் காணப்படுகிறோம். சுவிசேஷத்தின் செய்தியை உலகிற்கு எடுத்துச் செல்லவும் இயேசுவின் நாமத்தினால் மக்களுக்கு ஊழியம் செய்யவும் நாம் ஏராளமான ஆதார மூலங்களையும் வாய்ப்புக்களையும் கொண்டுள்ளோம்; ஆயினும் நாம் தூக்கத்தில் நடப்பதாகவே தோன்றுகின்றது. செல்லும் இலக்கு பற்றி நாம் குறைவான அறிவுணர்வுடையவர்களாகவே காணப்படுகின்றோம். நாம் யார் மற்றும் என்னவாயிருக்கிறோம் என்பது பற்றி சிறிதளவு அறிவையே/விழிப்புணர் வையே நாம் செயல்விளக்கப்படுத்துகின்றோம். தேவன் நமக்களித்துள்ள பணிப்பொறுப்பிற்கான அவசரத் தன்மையின் அறிவுணர்வு எதையும் நாம் காண்பிப்பது இல்லை.*

*எடுத்துக்காட்டாக, சுவிசேஷ ஊழியத்திற்கான நமது தீவிரத் தன்மை எங்கே? அணிவகுத்துச் செல்வதற்கான கட்டளையைக் கர்த்தர் நமக்குக் கொடுத்தார்: "ஆகையால் நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்" (மத். 28:19, 20). இதைச் செய்வதற்கான ஒரு அவசரத் தன்மைக்கான ஆதாரத்தை நாம் எங்கு காண முடியும்? நமது உறக்கத்திலிருந்து நம்மை விழித்தெழுப்பக் கூடியது எது?*

*ஆதிக் கிறிஸ்தவர்கள் தங்கள் அர்ப்பணிப்பில்/வழிபாட்டில் மயங்கிக் கிடந்த பொழுது அவர்களை விழித்தெழுப்பியது எது? அவர்கள் ஆவிக்குரிய வகையில் தூங்கிக் கிடந்தனர். எபேசியர் 5ல் பவுல் அவர்களுக்கு விழித்தெழும் அழைப்பைக் கொடுத்தார்:*

> *"ஆதலால், தூங்குகிற நீ விழித்து,*
> *மரித்தோரை விட்டு எழுந்திரு,*
> *அப்பொழுது கிறிஸ்து உன்னைப் பிரகாசிப்பிப்பார்" (வ. 14).*

*உறங்கிக்கிடந்தவர்களைப் பவுல் பின்வரும் செய்தியுடன் எழுப்பினார்:*

> *ஆனபடியினாலே, நீங்கள் ஞானமற்றவர்களைப்போல நடவாமல், ஞானமுள்ளவர்களைப்போலக் கவனமாய் நடந்து*

> *கொள்ளப்பார்த்து, நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளுங்கள். ஆகையால், நீங்கள் மதியற்றவர்களாயிராமல், கர்த்தருடைய சித்தம் இன்னதென்று உணர்ந்து கொள்ளுங்கள். துன்மார்க்கத்திற்கு ஏதுவான மதுபான வெறி கொள்ளாமல், ஆவியினால் நிறைந்து (5:15-18).*

*பவுலின் வார்த்தைகள் நமக்குச் சில கருத்துக்களைத் தரக் கூடும்.*

## ஞானத்தைப் பயன்படுத்துங்கள்

*விழித்தெழுவதற்கான பவுலின் அழைப்பு ஞானத்திற்கான அழைப்பாக உள்ளது: ''ஆனபடியினாலே, நீங்கள் ஞானமற்றவர்களைப்போல நடவாமல், ஞானமுள்ளவர்களைப்போலக் கவனமாய் நடந்து கொள்ளப் பார்த்து, நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப் படுத்திக் கொள்ளுங்கள்'' (5:15, 16).*

*இந்த நூற்றாண்டில் மக்கள் அதிகமாகக் கண்டு பிடித்தல்களைச் செய்து, உலகின் வரலாறு முழுவதிலும் இருந்துள்ளதை விட அதிகமான அறிவை ஆதாயப்படுத்திக் கொண்டுள்ளனர். நற்பயன்களை எடுத்தாளத் தொடங்கக் கூடுவதற்கு முன்பு நமக்கு அதிகமான உண்மைகளும் புள்ளி விவரங்களும் கிடைக்கின்றன, ஆனால் நமது உலகமானது ஞானத்தில் குறைவு பட்டுள்ளது. ஞானம் என்பது உண்மைகளை அறிதல் என்பதைக் காட்டிலும் அதிகமானவற்றை அர்த்தப்படுத்துகின்றது. ஞானம் என்பது - வாழ்வைக் குறித்து தேவனை மையங் கொண்டுள்ள ஒரு அணுகுமுறை சார்ந்த - கொள்கைகளைக் கையாளுவதாக உள்ளது.*

*சாலொமோன் ஒரு "இடைவாழ்வு இடர்ப்பாட்டின்" ஊடாகக் கடந்து சென்றார். அவர் தேவனை விட்டுப் புறம்பே திரும்பி தேவனில்லாத நிலையில் சந்தோஷத்தைக் கண்டறிய முயற்சி செய்தார். அவர் வாழ்வில் ஒரு சிலிர்ப்புள்ள மகிழ்வை உட்புகுத்துவதற்குத் தாம் நினைத்த எதையும் முயற்சி செய்வதற்கு விருப்பம், பணம், நேரம், சக்தி மற்றும் வாய்ப்புக்கள் ஆகியவற்றைக் கொண்டிருந்தார். சாலொமோன் ஞானமாய் இருப்பதற்குப் பதில் மதியீனமாய் இருப்பதைத் தேர்ந்து கொண்டார். தேவனின்றி சந்தோஷத்தைக் காண்பதற்கான அவருடைய தேடுதலானது அவரை குறைவுள்ளவராக, சோர்வுள்ளவராக, மற்றும் ஒளியற்றவராக விட்டு விட்டது. இப்பொழுது நாம், தேவனின்றி திருப்தியைக் கண்டறிய முயற்சித்துத் தவறிய விஷயங்கள் பற்றிய சாலொமோனின் கை நூலாகிய பிரசங்கியைக் கொண்டுள்ளோம்.*

*பவுலின் வார்த்தைகள் நமக்கு சாலொமோனின் அனுபவத்தை நினைவூட்டுகின்றன. பவுல், ''மதியற்றவர்களாய் இராதீர்கள்'' என்று கூறினார். பவுல் இன்றைய நாட்களில் இங்கிருந்தால், அவர் பின்வருமாறு கூறுவார்:*

> *அதிகம் பணத்தைப் பெறுவதினால் நீங்கள்*
> *அகமகிழ்வைக் காணலாம் என்று நினைக்கின்றீர்களா?*

*மதியற்றவராய் இராதீர்கள்.*
*அளவற்ற விதத்தில் நீங்கள் விரும்பிய அவ்வீட்டை வாங்குவதினால்*
*அகமகிழ்வைக் காணலாம் என்று நினைக்கின்றீர்களா?*
*மதியற்றவராய் இராதீர்கள்.*
*அழகுத் தோற்றம் கொண்ட இளைஞனை அல்லது இளம் பெண்ணை*
*அருந்துணையாய்ப் பெறுவதினால் அகமகிழ்வைக் காணலாம்*
*என்று நினைக்கின்றீர்களா?*
*மதியற்றவராய் இராதீர்கள்.*
*அந்த வேலை மட்டும் கிடைத்து விட்டால் அகமகிழ்வைக் காணலாம்*
*என்று நினைக்கின்றீர்களா?*
*மதியற்றவராய் இராதீர்கள்.*
*மதுபானத்தினால் அல்லது போதை மருந்தினால் நீங்கள்*
*அகமகிழ்வைக் காணலாம் என்று நினைக்கின்றீர்களா?*
*மதியற்றவராய் இராதீர்கள்.*
*அதிகாரத்துவம் அனைத்தையும் தூக்கி எறிந்து விட்டு நீங்கள்*
*விரும்புவதை மட்டும் செய்வதினால் அகமகிழ்வைக் காணலாம்*
*என்று நினைக்கின்றீர்களா?*
*மதியற்றவராய் இராதீர்கள்.*[1]

*வாழ்வுக்கு ஒரே ஒரு வழிதான் உள்ளது, ஒவ்வொரு வாய்ப்பையும் மிகவும் அதிகமாய்ப் பயன்படுத்திக் கொள்வதற்கு ஒரே ஒரு வழிதான் உள்ளது - தேவனுக்காக வாழுங்கள் என்பதே அவ்வழியாகும். தேவனின்றி நாம் எதனை முயற்சி செய்தாலும் நாம் திருப்தி காண மாட்டோம்.*

*விழித்தெழுதல் என்பது ஞானம் என்பதுடன் தொடங்குகின்றது.*

## புரிந்து கொள்ளுதலைப் பயன்படுத்துங்கள்

*விழித்தெழுதல் என்பது தேவனுடைய சித்தத்தின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ளுதல் பற்றியதாகவும் உள்ளது: ''ஆகையால், நீங்கள் மதியற்றவர்களாயிராமல், கர்த்தருடைய சித்தம் இன்னதென்று உணர்ந்து கொள்ளுங்கள்'' (5:17). ஜான் ஸ்ட்டாட் அவர்கள், ''தேவனுடைய சித்தத்தைக் கண்டறிந்து அதைச் செய்வதைக் காட்டிலும் வாழ்வில் முக்கியத்துவம் வாய்ந்த விஷயம் வேறெதுவும் இல்லை'' என்று (இதற்கு) விளக்கம் அளித்தார்.*[2]

*விழித்தெழுந்து தேவனுடைய சித்தத்தை உணர்ந்து கொள்ளுவதற்கு இதுவே கிறிஸ்தவர்களுக்கான காலமாய் உள்ளது. தேவனுடைய சித்தத் திற்குப் புறம்பே அடியெடுத்து வைத்துள்ள ஒரு உலகத்தில் நாம் வாழ்கின் றோம் என்பதை நாம் உணர்ந்தறிய வேண்டும். உலகம் தேவனுக்கெதிராக நிற்கிறது. அது தேவனுடைய சித்தத்திற்கு இசைய மறுக்கின்றது.*

*அன்றாடம் நம் மீது மோதும் செய்திகள் தேவனுடைய சித்தத்திற்கு எதிர் விளைவை ஏற்படுத்துகின்றன, இவை எல்லாக் காலங்களிலும் கிறிஸ்தவர்கள் மீது செல்வாக்குச் செலுத்துகின்றன. நாம் யாவருமே தேவனை விட்டு விலகி அடியெடுத்து வைக்கின்ற கலாச்சாரத்தின்*

அழுத்தத்தை உணருகின்றோம். நம்மில் சிலர் விழித்தெழுந்து பொழுது போக்கிற்கான நமது ஆதார மூலங்களைப் பற்றி சிந்திப்பது அவசியமாக உள்ளது. நாம் விழித்தெழுந்து, நாம் வாசிக்கின்ற புத்தகங்கள், நாம் செல்லுகின்ற இடங்கள், நாம் நேரத்தைச் செலவிடும் வழிவகை ஆகிய வற்றை பற்றிச் சிந்திக்க வேண்டியது அவசியமாகின்றது. நாம் தேவனுடைய சித்தத்திற்கு விழித்தெழ வேண்டியது அவசியமானதாக உள்ளது.

## வல்லமையைப் பயன்படுத்துங்கள்

ஆவிக்குரிய வகையில் உறக்கத்தில் இருப்பவர்களை விழித்தெழுப்பு வதற்கு, வல்லமை என்பது மூன்றாவது திறவுகோலாக உள்ளது. சபைக்கான வல்லமையானது (பின்வரும்) ஒரே ஒரு ஆதார மூலத்திலிருந்து மட்டுமே வருகின்றது: கர்த்தருடைய பரிசுத்த ஆவியானவர். எபேசியர் 5:18 வசனம், "துன்மார்க்கத்திற்கேதுவான மதுபான வெறிகொள்ளாமல், ஆவியினால் நிறைந்து" என்று கூறுகின்றது.

ஒரு நபர் மதுபானம் அருந்தியிருக்கும் பொழுது, அவர் மதுபானத்தின் "ஆதிக்கத்தின் கீழ்" இருப்பதாக நாம் கூறுகின்றோம். அதன் விளைவுகள் அவரை அடக்கி ஆள்கின்றன. மதுபானம் அருந்தியுள்ள நபர், வித்தியாச மாக நடக்கின்றார், வித்தியாசமாகப் பேசுகின்றார், வித்தியாசமாகச் சிந்திக் கின்றார், மற்றும் அவர் தாம் தெளிவான நிலையில் இருக்கும்போது செய்வதிலிருந்து மாறுபட்ட நிலையில் பிற மக்களை நடத்துகின்றார். யாரேனும் ஒருவர் மதுபானம் அருந்தியிருக்கின்ற பொழுது, அவர் ஒரு வித்தியாசமான நபராகி விடுகின்றார்.

பவுல், கிறிஸ்தவர்கள் வித்தியாசமானவர்களாகும்படி - தேவனுடைய பரிசுத்த ஆவியானவரின் ஆதிக்கத்தின் கீழ் இருக்கும்படி - அழைப்பு விடுத்தார். ஆவியானவர் தேவ வசனத்தின் மூலம் நம் வாழ்வில் நிறைய நாடுகின்றார். இருப்பினும் நமது பாவங்கள், முரட்டுத்தனம், மற்றும் மனந் திரும்ப மறுத்தல் ஆகியவை ஆவியானவரின் வல்லமையை நம்மிடத் திலிருந்து அபகரிக்கக் கூடும். நாம் தேவனுக்குத் திறந்தவர்களாகவும் அவருடைய வசனத்திற்குக் கீழ்ப்படிந்தவர்களாகவும் இருக்கும் பொழுது, பரிசுத்த ஆவியானவர் நம்மை நிரப்புகின்றார்/நம்மில் நிரம்புகின்றார். அவருடைய வல்லமை நம் வாழ்வில் பெருக்கெடுத்து ஓடுகின்றது.

அப்படியானால், நாம் ஆவியானவரால் நிரப்பப்படுவது எவ்வாறு ஆகும்? முதலாவது, நிரப்பப்படும்படி விரும்புங்கள். ஆவியானவரின் வல்லமையின் மீதான விருப்பத்தில் நாம் குறைவுபட்டால் அவர் நமது வாழ்வில் வல்லமையூட்ட மாட்டார். நாம் பின்வருமாறு வாசிக்கின்றோம்:

> ... இயேசு நின்று சத்தமிட்டு: ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து பானம்பண்ணக்கடவன். வேத வாக்கியம் சொல்லுகிறபடி என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன்

*உள்ளத்திலிருந்து ஜீவத் தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்றார். தம்மை விசுவாசிக்கிறவர்கள் அடையப்போகிற ஆவியைக்குறித்து இப்படிச் சொன்னார் (யோவா. 7:37ஆ-39அ).*

*நமது வாழ்வில் ஆவியானவரின் வல்லமையுடன் நடந்து கொள்ளுதல் என்பது இயேசு அளிக்கின்றவற்றின் மீதான - அவரைப் போன்றிருப்பதற் கான வாய்ப்பின் மீதான - தாகத்துடன் தொடங்குகின்றது. நம்மை இயேசு வைப் போலாக்குதல் என்பது வசனத்தின் மூலம் ஆவியானவர் செய்யும் விசேஷித்த செய்கையாக உள்ளது, ஆனால் இதை நாம் விரும்பினால் மட்டும் அவர் செய்கின்றார்.*

*இரண்டாவது, தேவனுடைய வசனத்தை அறியப் பெறுவதினால் ஆவியானவரால் நிறையப் பெற்றிருப்பதற்கான அழைப்புக்கு நாம் கவனத் துடன் செவி கொடுக்க வேண்டும்: "கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக" (கொலோ. 3:16). ஆவியானவர் நம்மை நிறைக்கும்படி அனுமதிக்க வேண்டும் என்று எபேசியர் 5:18 நமக்குக் கூறுகின்றது. ஆவியும் வசனமும் ஒன்றாய் இணைந்து செல்லுகின்றன(ர்). ஆவியானவரால் நிரப்பப்படுதல் என்பது நாம் வசனத்தை அறியவும் நமக்குள் வசனம் தங்க வேண்டியதையும் கேட்கின்றது. நமது வாழ்வில் ஆவியானவர் நிரப்பப்படுதல் என்பது நமக்குள் தேவ வசனம் ஜீவனுள்ளதாயிருக்கக் காரணமாகின்றது. ஆவியும் வசனமும் ஒன்றாய் இணைந்து செயல்படுகின்றன(ர்).*

*மூன்றாவது, ஆவியானவரால் நிரப்பப்படுவதற்கு நாம் நம் வாழ்வு முறையை இயேசுவுக்கு அர்ப்பணிக்க வேண்டும். ஆவியானவரால் நிரப்பப் பட்டிருப்பதற்கான திறவுகோலானது நாம் அடிக்கடி பாடும் பாடல் ஒன்றின் வரிகளில் காணப்படுகின்றது: "இயேசுவுக்கு எல்லாவற்றையும் ஒப்புவிக்கின்றேன்." இந்த வார்த்தைகள் மணிக்கு மணி, கணத்திற்கு கணம் என்ற அடிப்படையில் நமது இலக்காகின்ற பொழுது, ஆவியானவர் நமது வாழ்வில் நிரம்புவார். நாம் தூக்கத்தில் நடப்பதை நிறுத்தி விடுவோம். நாம் மிகவும் விழிப்புள்ளவர்களாயிருந்து, ஆவியானவருடன் அடியெடுத்து வைத்து, அவரது வல்லமையில் பலப்படுவோம்.*

## *முடிவுரை*

*கிறிஸ்தவர்கள் என்ற வகையில் நீங்கள் தூக்கத்தில் நடந்து கொண்டு இருக்கின்றீர்களா? ஞானத்திற்கும், புரிந்துகொள்ளுதலுக்கும், ஆவியான வரால் நிரப்பப்பட்டிருத்தலுக்கும் மீண்டும் திரும்புங்கள். இது மேலிருந்து வரும் ஞானத்தைப் புரிந்துகொள்ளுதலுக்கும், கர்த்தருடைய சித்தத்தைப் புரிந்துகொண்டு கீழ்ப்படிதலுக்கும், ஆவியானவரால் நிரப்பப்பட்டிருப் பதிலிருந்து வருகின்ற வல்லமையை நாடி ஏற்றுக் கொள்ளுதலுக்குமான காலமாக உள்ளது. தேவன் தமது சபை மிகவும் விழிப்புடன் இருக்க வேண்டும் என்று விரும்புகின்றார்.*

*நீங்கள் ஒரு கிறிஸ்தவராய் இல்லாதிருந்தால், கிறிஸ்து உங்களுக்காகச்*

*செய்துள்ளது பற்றி நீங்கள் விழிப்படைய இதுவே காலமாய் உள்ளது. அவரிடமாய்த் திரும்பி, உங்கள் பழைய வாழ்விலிருந்து மனந்திரும்பி, உங்கள் பாவங்கள் கழுவப்படுவதற்கு ஞானஸ்நானம் பெறுங்கள். உலகத்தில் கிறிஸ்துவின் வெளிச்சமாய்ப் பிரகாசிப்பதற்காக ஞானஸ்நானத் தண்ணீரில் இருந்து எழும்புங்கள்.*

*குறிப்புகள்*

[1]Max Anders, *The Good Life: Living With Meaning in a "Never-Enough" World* (Dallas: Word Publishing, 1993), 147-48. [2]John R. W. Stott, *The Message of Ephesians: God's New Society,* The Bible Speaks Today, gen. ed. John R. W. Stott (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1979), 203.